

கடலூர் மேற்கு மாவட்டம், விருத்தாசலம் சட்டமன்ற தொகுதி, கம்மாபுரம் கிழக்கு ஒன்றியம்,இருப்பு ஊராட்சி நண்டுக்குழி கிராமத்தைச்சேர்ந்த தமிழக வாழ்வுரிமைக் கட்சி இளைஞர் அணி நிர்வாகி ஆர்.அன்பரசன் மற்றும் நிர்வாகிகள் 10பேர் கழகத்தில் இணைந்தனர். முன்னாள் ஒன்றிய கழக பொருளாளர் என்.ஆர்.தேவேந்திரன் தலைமையில்,மாவட்ட கழக செயலாளர்,அமைச்சர் சி. வி.கணேசன் முன்னிலையில் ஆர்.அன்பரசன்,ஆர்.மணிகண்டன், கே.சுந்தர் கே.பழனிவேல் எஸ்.சிவக்குமார்,கே. பிரபு கே. சுரேஷ்,டி. தேவநாதன் டி. சண்முகசுந்தரம், டி.செல்வம் உள்ளிட்ட 10 பேர் தமிழக வாழ்வுரிமைக் கட்சியில் இருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தனர். அனைவருக்கும் அமைச்சர் சி.வி.கணேசன் இரு வண்ண கழக சால்வை அணிவித்து வரவேற்று வாழ்த்து தெரிவித்தார்.

# இல்லத்தரசிகளுக்கு ரூ.8,000 கூப்பன்! தகுதியானவர்களுக்கு பெற்று தருவேன்!

## கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் கு.பிச்சாண்டி வாக்கு சேகரிப்பில் உறுதி!

*கீழ்பென்னாத்தூர், ஏப். 12-*

கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழ்பென்னாத்தூர் தெற்கு ஒன்றியத்தில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் கு. பிச்சாண்டி வயலூர், ஜமீன் கூடலூர், நீலந்தாங்கல், ஆவூர், ஒலைப்பாடி,பன்னியூர், ஆங்குணம், அகரம், வைப்பூர் உள்ளிட்ட கிராமங்களில் வீடு தோறும் சென்று பொது மக்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.





வேட்பாளர் கு.பிச்சாண்டி பேசுகையில்,

திராவிட மாடல் ஆட்சியின் தலைவரும் தமிழக முதல்வருமான மு. க. ஸ்டாலின் அவர்களின் ஆசியுடன் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளராக போட்டியிடுவதாக தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த ஐந்து ஆண்டுகளில் கீழ்பென்னாத்தூர் தொகுதிக்காக பல முக்கியமான வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

குறிப்பாக, வெறையூர் - தண்டையூர் இடையில் ஆற்றின் குறுக்கே சுமார் ரூ.6.17 கோடி மதிப்பில் உயர்மட்ட மேம்பாலம் அமைத்து தந்துள்ளேன் அரசு உயர்நிலைப் பள்ளியில் ரூ.2.6 கோடி மதிப்பில் 8 கூடுதல் வகுப்பறைகள் கட்டிடம் அமைத்து தந்துள்ளேன் நாயுடுமங்கலம் பகுதியில் ரூ.4.50 கோடி மதிப்பில் ஒழுங்கு முறை விற்பனை கூடம் அமைத்து தந்துள்ளேன் கீழ்பென்னாத்தூர் பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ரூ.3.51 கோடி மதிப்பில் புதிய பேருந்து நிலையம் அமைத்து தந்துள்ளேன் போன்ற முக்கிய பணிகள் நிறை வேற்றப்பட்டதாக தெரி வித்தார். மேலும், பல ஊராட்சிகளில்

ஜமீன் கூடலூர் மற்றும் அதன் ஆதிதிராவிடர் பகுதிகளில் சிமெண்ட் சாலைகள் அமைத்து தந்துள்ளேன் ஆவூர் ஊராட்சியில் சிமெண்ட் சாலைகள் அமைத்து தந்துள்ளேன் ஆவூர் மின்னியந்தல் சாலை, பழைய காலனி முருகர் கோவில் அருகே ஆழ்துளைக் கிணறு, மின் மோட்டார் மற்றும் மினி டேங்க் அமைத்து தந்துள்ளேன்

ஆவூர் தொகுப்பு வீடுகள் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்து தந்துள்ளேன்

ஆவூர் முஸ்லிம் தெருவில் பக்க கால்வாய் அமைத்து தந்துள்ளேன் பன்னியூர் ஆதிதிராவிடர் பகுதியில் நெருக்கால்வாய் அமைத்து தந்துள்ளேன் போன்ற அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி அவர்கள் 1989ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதை நினைவுகூர்ந்தார். இன்று வரை அந்த திட்டம் விவசாயிகளுக்கு ஆதரவாக உள்ளது என்றும் கூறினார்.

மேலும், நெல் கொள்முதல்விலைகுவிண்டாலுக்கு ரூ.3500 ஆக உயர்த்தப்படும் கரும்பு விலை ரூபாய் ரூ.4000 உயர்த்தப்படும் பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.5 உயர்த்தப்படும் என விவசாயிகளுக்கான வாக்குறுதிகளையும் எடுத்துரைத்தார். அதேபோல், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை ரூ.2000 ஆக உயர்த்தப்படும் புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்ட ஊக்கத்தொகை ரூ.1500 ஆக உயர்த்தப்படும் ‘நான் முதல்வன்’ திட்டம் மூலம் கிராமப்புற மாணவர்களுக்கு உயர் கல்வி மற்றும் உயர்நிலை வேலை வாய்ப்புகள் அதிகரிக்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும், இல்லத்தரசிகளுக்கான திட்டத்தின் மூலம் 8000 மதிப்பிலான கூப்பன் வழங்கப்பட்டு, அதனால் வீட்டு மின்சாதனங்களை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படும் என்றும் கூறினார். “முதல்வர் மு. க. ஸ்டாலின் சொல்வதை செய்வார், செய்வதைச் சொல்வார். அவர் அறிவித்துள்ள திட்டங்களை இத்தொகுதியில் முழுமையாக நிறைவேற்ற நான் மீண்டும் ஒரு வாய்ப்பு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் சிறுபான்மை மக்களுக்கு என்றும் உறுதுணையாக இருக்கும் உங்கள் பொன்னான வாக்குகளை உதயசூரியன் சின்னத்தில் பதிவு செய்யுங்கள்” என அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த வாக்கு சேகரிப்பில் கீழ்பென்னாத்தூர் ஒன்றிய செயலாளர்கள் ஆரஞ்சு ஆறுமுகம், வி பி அண்ணாமலை, ராமஜெயம் இரா. ராஜேந்திரன், பி. வரதராஜன், பி. இளம் பருதி, ஜி.பிச்சாண்டி, ஜெயபாரதிமணி, ஆர். அன்பழகன், எஸ். மோசஸ், ஏ. சீதாராமன், ஏ. ஆனந்தன், க. சம்பத், எஸ். தண்டபாணி, ஜப்பார், சக்சஸ் தாஸ், எஸ். சூர்யா, பொன்னுசாமி, ஏ. தெய்வீகன், து.க. மனோகரன், வே. கோவிந்த், ச. சங்கர் ஆகியோர் கலந்து கொண்டு வேட்பாளர் கு. பிச்சாண்டிக்காக வாக்கு சேகரித்தனர்.

மேலும், கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த மனிதநேய மக்கள் கட்சி, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய கட்சி, தே.மு.தி.க., ம.தி.மு.க., நிர்வாகிகள், இளைஞரணி, மகளிர் அணி, விவசாய அணி மற்றும் தொண்டரணி உறுப்பினர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு பிரச்சாரத்தை உற்சாகமாக முன்னெடுத்தனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆதரவு பெற்ற மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டும் வெற்றி வேட்பாளர் டாக்டர்.பொன்.கௌதம்சிகாமணிக்கு மணம்பூண்டி ஒன்றியம், மணம்பூண்டி, குடமருட்டி, ஆடூர்கொளப்பாக்கம், கோட்டமருதூர், கோட்டமருதூர், கொடுக்கப்பட்டு, வேளாகுளம், வசந்த கிருஷ்ணாபுரம், ஆதிச்சானூர், அரசங்குப்பம், வீரபாண்டி, தேவானூர் ஆகிய ஊராட்சிகளில் கழக துணைப் பொதுச்செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை சொல்லி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

**2026** சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொண்டு வருகிறார். மூன்று கட்ட பரப்புரை முடிந்த நிலையில், நான்காம் கட்டமாக பரப்புரை மேற்கொண்டு வருகிறார். அதன் விவரம் வருமாறு:

**12.4.2026 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.00 மணி | மன்னார்குடி | பெரியார் சிலை அருகில், மன்னார்குடி. |
| காலை 11.00 மணி | நாகப்பட்டினம் | நெல்லுக்கடை மாரியம்மன் கோயில் எதிரில், நாகப்பட்டினம். |
| மாலை 4.00 மணி | நன்னிலம் | ஒகை, குடவாசல். |
| மாலை 5.30 மணி | பூம்புகார் | மங்கைநல்லூர், குத்தாலம். |
| இரவு 7.00 மணி | குறிஞ்சிப்பாடி | வள்ளலார் பேருந்து நிலையம் எதிரில், வடலூர். |
| இரவு 8.00 மணி | நெய்வேலி | இந்திரா நகர், கும்பகோணம் சாலை, நெய்வேலி. |
| இரவு 9.00 மணி | திட்டக்குடி | பேருந்து நிலையம் அருகில், திட்டக்குடி. |

**13.4.2026 திங்கள்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | விழுப்புரம் | நான்கு முனை சாலை சிக்னல், விழுப்புரம். |
| காலை 10.45 மணி | திருக்கோவிலூர் | பேருந்து நிலையம் அருகில், திருக்கோவிலூர். |
| மாலை 4.00 மணி | செஞ்சி | நான்கு முனைச் சந்திப்பு, விழுப்புரம் சாலை, செஞ்சி. |
| மாலை 5.30 மணி | திண்டிவனம் | செஞ்சி சாலை, திண்டிவனம். |
| இரவு 7.00 மணி | செங்கல்பட்டு | இராட்டினம் கிணறு, செங்கல்பட்டு. |
| இரவு 9.00 மணி | ஆலந்தூர் | அண்ணா சிலை அருகில், ஸ்டேட் பேங்க் குடியிருப்பு, நங்கநல்லூர். |

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை – 18
நாள் : 11.4.2026

கலைஞர் 100 1924 - 2023



## நாமக்கல் மேற்கு மாவட்டம்

# பரமத்தி வேலூரில் கே.எஸ்.மூர்த்தி தீவிர பிரச்சாரம்!

## பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு!

நாமக்கல், ஏப். 12 –

நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளருமான கே.எஸ். மூர்த்தி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

அதன் ஒரு பகுதியாக பரமத்தி அருகிலுள்ள மாவுரொட்டி, ஓவியம் பாளையம், வெள்ளாளபாளையம், கரட்டுப்பாளையம், தேவிபாளையம், கீழக்கரை மறவாபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்து வாக்கு சேகரித்தார்.

அப்போது நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் வரிசையாக நின்று பூக்கள் தூவியும், ஆரத்தி எடுத்தும் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பொதுமக்களிடம் பேசிய கே. எஸ்.மூர்த்தி, தாம் வெற்றி பெற்ற பின்னர் அப்பகுதி மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பேன் என உறுதியளித்தார்.

இந்த வாக்கு சேகரிப்பின் போது நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மகிழ் பிரபாகரன், பரமத்தி பேரூர் செயலாளர் ரமேஷ் பாபு, பரமத்தி பேரூராட்சித் தலைவர் மணி, நாமக்கல் மேற்கு மாவட்ட பொறியாளர் அணி தலைவர் அருண் பிரதாப் சக்கரவர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதியில் மூன்றாவது முறையாகப் போட்டியிடும் கழக வேட்பாளர், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருக்கோவிலூர் வடக்கு ஒன்றியம், தகடி ஊராட்சியில் பொதுமக்களை வீடு வீடாக நேரில் சந்தித்து, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து, உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்தார், இதில் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பலர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.